Registered as a N paper n eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வூ ஆடிமீ ங௨க ( 1943 ஆகஸ்ட்மீ 16 திங்கட்கிழமை) [இல. ௩எ

## ஆலயத்திற் கொள்ளை

பருத்தித்துறை ஆக 12—

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறைக் கடைத் தெருவின் மத்தியில் அமைந்திருக்கும் புராதன சிவன் கோவிலில் திடுக்கிடும் முறையில் துணிகரத் திருட்டு நடந்திருக்கிறது. பெரிய அலவாங்குகள், சம்மட்டிகள் முதலிய ஆயுதங்களுடன் கோயிலின் மதிலேறிக் குதித்து உட்புகுந்து கதவுகளை உடைத்துத் திருடர்கள் சுவாமி அம்மன், நாயன்மார் முதலிய எல்லா விக்கிரகங்களையும் பெயர்த்து அடியிலிருக்கும் தங்க யந்திரத் தகடுகளையும்,கோயிலுக்குரிய பெருந்தொகை பெறுமதியான நகைகளையும் மற்றும் பல பொருள்களையும் சூறையாடிக் கொண்டுபோய் விட்டனரெனத் தெரிகிறது. இதனால் ஏற்பட்ட நஷ்டம் 18,000 ரூபாய் வரையிலாகுமென மதிப்பிடப் படுகிறது. பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

## பெர்லின், ரோமாபுரிமீது விமானத் தாக்குதல்

லண்டன் ஆகஸ்ட் 13—

பிருத்தானிய 'மஸ்கிட்டோ' விமானங்கள் பெர்லின்மீது விமானத் தாக்குதலை நடத்தின என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

ரோமாபுரி இன்று விமானங்களால் தாக்கப்பட்டது என்று இன்று வெளியான ரோமாபுரி அறிக்கை கூறுகிறது.

ஆர். ஏ. எப். விமானங்கள் நேற்றிரவு மிலானையும், டூரினையும் தாக்கியதாக லண்டனிலிருந்து அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்கத் துருப்புகள் திடீரெனத் குரிலித்தீவுகளில் இறங்கிவிடலாம். இத்தீவுகள் ஜப்பானிய பிரதான தேசபூமியைச் சேர்ந்தவைகளே. ஜப்பானில் வேறெந்த இடத்திலும் கரையோரமாகவும் அமெரிக்கத் துருப்புகள் இறங்க முயற்சிக்கலாம். ஜப்பானியர்கள் தற்பாதுகாப்புக்குத் தயாராய் இருக்கவேண்டும்'' இவ்விதம் 'அஷாஹி ஷிம்பன்' பத்திரிகை கூறுவதாக ஜப்பானியசெய்தி ஸ்தாபன அறிக்கை அறிக்கிறது.

## குரிலித் தீவுகள் தாக்கப்பட்டன

வாஷிங்டன் ஆக 12

ஜப்பானுக்குச் சொந்தமான குரிலித் தீவுகளை. அமெரிக்க விமானங்கள் தாக்கின. ஜப்பானிய எதிர்ப்பு கடுமையாக இருந்தது என்று வாஷிங்டன் கடற்படைப்பகுதி அறிக்கை கூறுகிறது.

இத்தீவுகள் ஜப்பானிய பிரதான பூமியின வடகோடியில் ஒரு சங்கிலித் தொடர்போல் ருஷியாவைச் சேர்ந்த காமசெட்கா தீபகற்பம் வரை அமைந்திருக்கின்றன.

சென்ற திங்கட்கிழமை இரவு 1 மணியளவில தாக்குதல் நடைபெற்றது. 40 சத்துருவிமானங்கள் தடுத்தன. அவைகளில் 5 சுட்டு வீழ்த்தப்பட்டன. அமெரிக்க விமானங்கள் இரண்டு காணப்படவில்லை.

## இன்று காங்கிரஸ் ஊழியர்களின் வேலை என்ன?

### ஸ்ரீமதி சரோஜினி தேவியின் விளக்கம்

ஹைதராபாத் தக்கணம் ஆக 9—

ஸ்ரீமதி ஸரோஜினிதேவி பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காந்திஜியையும் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் அரசாங்கம் கைது செய்துவிட்டதன் காரணமாகக் காங்கிரஸ் ஊழியர்களிடையே அபிப்பிராய பேதமும் குழப்பமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திட்டமான கட்டளை எதுவும் இல்லாமலும் வழிகாட்டுவோர் இல்லாமலும் மேற்படி ஊழியர் திடீரெனத் திக்குத்திசை தெரியாமல் விடப்பட்டனர். காங்கிரஸின் பெயரால் விஞ்ஞாபனங்கள் வெளியிடவோ புதுக்கொள்கைகளை வகுக்கவோ காக்கிரஸைச் சேர்ந்த யாருக்கும் எந்தக் கோஷ்டிக்கும் காரியக்கமிட்டியோ அல்லது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியோ அதிகாரமளிக்கவில்லை என்று நான் கூறுகிறேன். சிலர் மனத்தில் குடிகொண்டிருந்த கொஞ்ச நஞ்சம் சந்தேகமும் இதன்மூலம் தீர்ந்து விடலாம்.

அதிகாரம் இல்லை

தவிர, காங்கிரஸால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் லக்ஷியத்துக்கு விரோதமாக ரகஸியக் காரியங்கள் நடக்கவோ அன்றிக் காங்கிரஸின் பெருமையை மேலும் வளர்க்கவோ மேற்படி கமிட்டிகள் அதிகாரம் அளித்ததாகக் கூறப்படுவது. இதைநான் நம்பவில்லை. உண்மையல்ல. இப்போது காங்கிரஸின் விதிகளைத் திருத்தவோ அல்லது அதன் முடிவுகளை மாற்றவோ எந்தக் காங்கிரஸ் அங்கத்தினருக்கும் அதிகாரம் கிடையாது.

நமது பொறுப்பு

தவிர, தலைவர்கள் இல்லாத நிலைமையில் நாட்டிற்காகக் காங்கிரஸ் செய்துவரும் வேலைக்குச் சிறிதும் தடையில்லாமல் அவ்வேலையை மேலும் நடத்திச் செல்வது நம்முடைய பொறுப்பாகும். ஆடம்பரமான திட்டங்களுக்கு இது காலமல்ல. இப்போது நாட்டின் முன் முனைத்துள்ள பிரச்னைகளோ அனந்தம். எல்லோரும் முனைந்து சேவை புரிந்து தீர்க்கவேண்டியவை அவை.

மக்களின் கூக்குரல்

பட்டினியால் வாடும் பல்லாயிரக் கணக்கான மக்களின் கூக்குரல் நமது நெஞ்சைப் பிளக்கின்றது. அந்தக் கூக்குரலுக்கு நாம் செவி சாய்க்காமலிருக்க முடியாது. நிவாரண வேலையில் நேரடியாகச் சம்பந்தங்கொள்ள எனது தேக நிலைமை இடம் கொடுக்கவில்லையாயினும், ஹைதராபாத் உத்தியோகப்பற்றற்ற உணவுப்பொருள் நிவாரணக் கமிட்டியினருடன் நான் தினந்தோறும் கலந்து பேசி வருகிறேன். ஆகவே, ஏழை மக்களின் துயரம் பெருகிவருகிறதை நான் நன்கு அறிவேன். இப்பொழுது நம்முன் உள்ள ஒரே வேலை அவர்களது துயரைத் துடைப்பதுதான். ஏதாவது ஒருவகையில் அவர்களுக்கு உதவி ஆறுதல் அளிக்கவேண்டும்.

'அன்னமே தெய்வம்'

இத்தகைய நெருக்கடியில் சொந்தச் சண்டைகளுக்கும் வகுப்புப் பூசல்களுக்கும் ராஜியச் சச்சரவுகளுக்கும் இடமேது? ஜன ஸேவையை அடிப்படையாகக்கொண்டு ஒத்துழைத்தால் ஒற்றுமை அசைக்கமுடியாது ஏற்பட்டுவிடும். பசித்தவர்களுக்கு அன்னமே தெய்வம் என்று 1921ம் ஆண்டிலே அண்ணல் காந்திஜி அருளினர். என்ன தூய வாக்கு!

## "குவிபெய்க்" கூட்டம்

### இந்த முறையும் வந்திலர்

சென்றவாரம் 'குவிபெய்க்'கிற் கூடிய கூட்டத்திற்கு இந்தமுறையும் ருஷிய அதிகாரியாகிய மிஸ்ரர் ஸ்ராலின் சமுகஞ்செய்யவில்லையாம்; யுத்தத்தை இக்தச்சமயத்தில் விட்டுவர முடியாதென்பதாம் அவர் மிஸ்றர். ஸேர்ஜிலுக்கும், மிஸ்ரர். றூஸ்வெல்ரிற்கும் காட்டிய காரணம்; இப்படியே மிஸ்றர் ஸ்ராலின் மூந்திக் கஸபிலன்கா என்னுந் தானத்திற் கூடிய கூட்டத்திலும் தாம் சமுகஞ்செய்யாது விடுத்து, யுத்தத்தை விட்டு வரமுடியாதென ஏதுவுங் கூறியுள்ளார். இரண்டு கூட்டத்திற்கும் இவர் சமுகமளிக்காமையையிட்டு இப்பொழுது பலர் பலவாறாக யோசித்துப் பலவாறு அபிப்பிராயப்படுகின்றனர். சிலர் இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டுமெனச் சந்தேகிக்கின்றனர். குறித்த கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம் பகைவர்களாகிய ஜர்மனி இத்தலிய யப்பானியரை எப்படிச் சமர்செய்து வென்று அடக்கலாமென்பதையிட்டு யோசித்தற்கேயாம். நோக்கம் இப்படியிருப்பவும் மிஸ்றர் ஸ்ராலின் ஆங்குச் சமுகஞ்செய்யாமை எவர்க்கும் யோசித்தற்கு இடமாகுமென்பது நிசந்தான். ஆனால், ருஷிய அதிகாரிவாரதொழிந்தமையையிட்டு மிஸ்ரர் றூஸ்வெலற் பின்வருமாறு ஞாயஞ் சொல்லுகிறார்:-

மிஸ்ரர் ஜேர்ஜிலும் தாமும் மிஸ்றர் ஸ்ராலினும் கூட்டங் கூடக்கொண்ட நோக்கம் தம்பகைவராகிய ஜர்மனிய இத்தலிய யப்பானியரை வென்று அடக்குதற்கு என்பது பற்றிய தாம். ஆனால் ஸ்ராலினுக்கும் யப்பானியருக்கு மிடையே பகைமையுமில்லை இப்பொழுது யுத்தமுமில்லை; இப்படியிருக்க யப்பானியரையுஞ் சேர்த்து மாறாக யோசிக்குங் கூட்டத்திற்கு மிஸ்ரர். ஸ்ராலின் சமுகஞ்செய்வதெப்படியென்று மிஸ்றர் றூஸ்வெல்ற் இப்பொழுது கேட்கின்றார். இந்த நியாயம் மூந்தியும் றூஸ்வெல்ற்றிற்குத் தெரியக்கூடியதேயென்று பலர் ஆட்சேபிக்கக்கூடும். ஆனாற் பிந்தி வந்த செய்தியை நோக்குமிடத்து குவிபெக் கூட்டத்திற்கு மிஸ்றர் ஸ்ராலினாக, அவர் பிரதிநிதியாக எவரேனும் அழைக்கப்படவில்லையென்று புலப்படுகிறது; இந்த இரகசியங்களை பாரசல் அறிபமுடியும்.

## நெல் மூடைகளைத் திருடியவனுக்கு

### மோதக் கடுங்காவல் தண்டனை

யாழ்ப்பாணம், ஆக 10

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் நீதிபதி மிஸ்றர் குறெசெற் தம்பையா முன்பாகக் கிளிநொச்சி வாசிகளாகிய 1. கந்தர் வேலுப்பிள்ளை, 2. எஸ். பி. ஜோன்பிள்ளை முதலியவர்கள்மீது சென்ற மார்கழிமாதம் 3ந் திகதியளவில் நாயன்மார்கட்டுவாசியாகிய பண்டிதர் கே. கனகசபாபதியினது வீட்டை உடைத்து உட்புகுந்ததாகவும் 115 ரூபாய் பெறுமதியான 6 மூட்டை நெல்லைக் களவெடுத்ததாகவும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப் பட்டது.

வழக்காளியின் சார்பாக முடிக்குரிய நியாயவாதி மிஸ்றர் ஏ. வி. குலசிங்கமும் எதிரியின்சார்பாக நியாயதுரந்தரர் மிஸ்றர் சி. ஆர். தம்பையாவும் 2ம் எதிரி சார்பாக நியாயவாதி மிஸ்றர் கே. சண்முகமும் விவாதித்தார்கள்.

விசாரணையின் போது கிளிநொச்சிப் பொலிஸ் சார்ஜண்ட் என். ஜி. நாகரத்தினம் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

1ம் எதிரி வாதியின் கமத்திலிருந்து 300 யார் தூரத்திற்கு அப்பால் இருப்பவன். இருந்தும் அவன்வசிப்பது இக்கமத்துக்கு அருகிலேதான். வாதி கே. கே. என்ற அடையாளத்தையும் சில தமிழ்ச் சொற்களையும் இச்சாமானைப் பிடிப்பதற்குமுன்பே தெரிவித்திருந்தார்.

விசாரணையின்பின் நீதிபதி 1ம் எதிரி இரண்டு குற்றத்திற்கும் குற்றவாளியெனக்கண்டு ஆறுமாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் 2ம எதிரிமீது குற்றச்சாட்டு நிரூபிக்கப் படவில்லையெனக் கூறி 2ம் எதிரியை விடுதலைசெய்தும் தீர்ப்பளித்தார்.

நெல்லை உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பிவைத்தார்.

## ஜப்பானிய விமான நிலையம் தீக்கிரையானது

லண்டன் ஆக 13—

நியூஜோர்ஜியாவில் பெய்ரோகோ துறைமுகத்திலிருக்கும் ஜப்பானிய காவற்படையை நோக்கி அமெரிக்க தரைப்படைகள் முன்னேறின. காலநிலை மோசமாகவிருந்ததால் ஸாலமன்ஸ் பிரதேசத்தில் விமான நடவடிக்கைகளெதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

டச்சு நியூகினியிலுள்ளகெய்மானாவை நேசதேசக் குண்டுவிமானங்கள் தாக்கின. இங்கு மூட்டப்பட்ட தீ 60 மைல் தூரத்திற்குத் தென்பட்டது. டிமோகாவிலுள்ள ஜப்பானிய விமான நிலையத்துக்கும் தீ மூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸு
ஆடி௴ ௩௧௨ திங்கட்கிழமை

## இது சரியல்லவே!

இக்காலத்திலே நோய் வாய்ப்பட்டோருக்கும், பட்டுச் சுகமடைந்து வருவோர்க்கும் பத்தியமாக உபயோகித்தற்கான சம்பா அரிசி கிடைத்தலரிதாக, மேலைத் தேசத்திலிருந்து வந்துள்ள 'மால்றட் மில்க்', 'ஓவல்ரின்' முதலிய பாலாகாரங்களையும் மாவாகாரங்களையும் இங்குள்ள நோயாளர் உபயோகிக்க வேண்டி நேர்ந்துவிட்டது; இப் பாலாகாரங்கள் மாவாகாரங்கள் தாமும் இலகுவிற் பெறத் தக்கனவல்ல. யாரேனும் நோயாளர் இந்த ஆகாரங்களை வாங்கி உபயோகிக்க வேண்டுமேல், முன்போலன்றி, இப்பொழுது தம்மைப் பரிகரிக்கும் வைத்தியரிடத்திற் பத்திரம் பெற்றுக் கடைக்காரருக்குக் காட்டி, அவர்கள் கொடுத்தால் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்பது விதியாய் விட்டது. இந்த விதியின் பிரகாரம் ஆங்கில வைத்தியரிடம் சிகிச்சை பெறுவோர் அவ்வாங்கில வைத்தியரிடத்தும், தமிழ் வைத்தியரிடம் பரிகரிப்புப் பெறும் நோயாளர் அத்தமிழ் வைத்தியரிடத்தும் பத்திரம வாங்கிக் கடைக்கனுப்பி ஒருவாறு அமிர்தம் போல அருமையான இவ்வுணவுகளை அதிக விலை கொடுத்து வாங்கி உபயோகித்துச் சுகமும் அடைந்து வந்தார்கள்.

ஆனால், இப்பொழுது 'டக்ரேஷ்' எனப்படும் ஆங்கில முறை வைத்தியர் கொடுத்த பத்திரத்தைக் கொண்டு போய்க் கடையிலுள்ளாருக்குக் கொடுத்தால், மேலே சொல்லப்பட்ட பாலுணவு மாவுணவைக் கொடுப்பார்களாம், தமிழ் வைத்தியர்கள் கொடுக்கும் பத்திரத்தைக் கொண்டு போய்க் காட்டினால் அக் கடையிலுள்ளார் கொடுக்க மறுக்கின்றனராம். இது மெய்தானோ என்று சிறந்த தமிழ் வைத்தியர் சிலரை நாம்நேரில வினவியபோது, அவர்கள் 'ஆம் அது முழுவதும் நிசம்' என்று உறுதியாகக் கூறினர். மேலே சொல்லப்பட்ட அரிய பண்டங்களை வைத்து விற்கும் கடைக்காரரை வினவுவித்தபோது ஆம், 'அது மெய்தான்; டக்ரர்மாரிடம் பத்திரம்பெற்று வருபவருக்கேயொழிய, தமிழ் வைத்தியர் கொடுக்குந் துணடுக்குப் பால்தகரம்மாப்பெட்டி கொடுக்க உத்தரவில்லை' என்று அவர்களும் அழுத்திச் சொன்னார்கள். அந்த மேலதிகாரிகளென் றிருப்போர் யாரென வினவியபோது, கொழும்பிலுள்ள தொகையிற் பண்ட முதவும் ஐக்கிய சங்க அதிகாரிகள் (Whole-sale Co-operative Store Society) என அறியலானேம்.

இந்தச் சங்கத்தார்க்கு இப்படியான பட்சபாதத்தோடு கூடிய உள்ளம் நேர்ந்ததற்குக் காரணமென்னையென்பதைத் தான் அறிய விரும்புகிறேம். 'டக்ரர்மாரெல்லாரும் நேர்மையானவர்கள், அவர்கள் உண்மையாகத் தேவையானவர்கட்கு அநுமதிப் பத்திரங் கொடுப்பார்கள், ஆனல், தமிழ் வைத்தியர்கள் முகமன்பார்த்து வரைவின்றி எவர்க்கும் அநுமதிப் பத்திரங் கொடுக்குமியல்புள்ளவர்கள், ஆனதினுற்றான் ஆங்கில வைத்தியர் மூலம் பெறும் பத்திரத்திற்கு மேற்படி உணவு கொடுக்கவும், தமிழ் வைத்தியரின் பத்திரங்கட்குக் கொடா தொழியவும் விதிக்கப்பட்டிருக்க வேண்டும்' என இங்குள்ளார் சிலர் யூகித்துச் சமாதானஞ் சொல்லுகிறார்கள். இந்தச் சமாதானம் நிசமோ அல்லவோ என்பதைத் தீர்க்கமாக அறிய முடியவில்லை; இது நிசமாயிருந்தால், தமிழ வைத்தியர்மீது கொள்ளுஞ் சந்தேகம நீதியானதா என்பது ஆசங்கைக் கிடமாகும். தமிழ் வைத்தியர்களெல்லாரும் நேர்மையற்றவர்களென்றும், ஆங்கில வைத்தியர்களெல்லாரும் நேர்மையுள்ளவர்களென்றும் மேற்படி சமுதாய அதிகாரிகள் எண்ணுவது புத்திக்குத்தோஷமாகும். 'இலையும் பழுப்பும் எங்கு முண்டு' என்பது எங்கள் நாட்டிலுள்ள பழமொழி.

அல்லாமலும் இந்த வடமாகாணத்திலே தமிழ் வைத்திய முறையில் நம்பிக்கை பூண்டு தமிழ் வைத்தியத்தையே செய்விக்கும் மக்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதத்தினரெனலாம். இப்படிப்பட்டவர்கள் இந்த மாவுணவு பாலுணவின் பொருட்டு, தங்களுக்கு நம்பிக்கையான தங்கள் பரம்பரைத் தமிழ் வைத்தியர்களை விடுத்து, டக்ரர்மாரிடம் இனிமேற் போகவேண்டுமென்பதா, மேற்படி சமுதாய அதிகாரிகளின் கருத்து? மருந்து விஷயத்தில் ஆங்கில வைத்தியர்களெனிலோ அங்கிருந்து இங்கு வரும் மருந்துகளைக் கலக்கும் முறை பூண்டுள்ளவர்கள்; தமிழ் வைத்தியர்களெனிலோ தாமாகவே மருந்துக்கு வேண்டிய மூலிவகைகளையும் ஏனைய உபகரணங்களையும தேடி ஔஷதங்களைத் தம் கையாலேனும் தம் மேற்பார்வையிலேனும் ஆக்குபவர்கள். மருந்தெண்ணெய் வகையையும் அப்படியே ஆக்கும் ஆற்றல் படைத்தவர்கள். மேலைத் தேசத்திலிருந்து மருந்துப் பொருளும் மருந்து வகையும் இக்காலத்தில் வரவில்லையே, நோய்க்குத் தக்க ஔஷதங் கொடுக்க வகையில்லையேயென்று இடர்ப்படுபவர்கள் தமிழ் வைத்தியர்களல்லர். குறித்த ஐக்கிய சமுதாய அதிகாரிகள் செய்யும் இந்தப் பட்சபாதமான செயல், இங்குள்ள சுதேச வைத்தியர்களெல்லார்க்கும் பெரும் அவமானத்தை ஆக்குதற்கும், இங்குள்ள மக்களின் உள்ளங்களைப் புண்படுத்துவதற்கும் ஏதுவான செயலென்பதை இக்க மாகாணத்தை யாளும் தலைவரே சிந்தித்து, அவரே இப்பொருந்தாச் செயலைத் தடுத்து, நோய்வாய்ப் பட்டுள்ளாரெல்லார்க்கும் இன்றியமையாதனவாகிய மாப் பண்டங்களையும் பாலுணவுகளையும் பட்சபாதமின்றிப் பகிர்ந்து கொடுக்கச் செய்வரென இங்குள்ள மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இலக்கியப் பகுதி:

# திருப்பூவண நாத ருலா

[ க. கி. ந. ]

### III

இன்னும், கந்தருவர் சித்தர் கருடர் சுரர் உரகர், வெந்திறற் கின்னரர் ஆகியோர் சேவித்து வந்தனர். சம்பந்தசுவாமிகளும், அப்பர்சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருவாதவூரடிகளும், வரகுணபாண்டியரும், தண்டீசரும் தத்தம் ஊர்திகளிலும் திருவாடு தண்டினும் ஏறிபவராய் வந்தனர். (இப்பகுதியைச் சொல்லுங்கால் பக்திச்சுவை நனி பொருந்தக் கூறுவர் ஆசிரியர். இவ்வாறே அடியார்களைப்பற்றிக் கூறும் பகுதிகள் புலவரின் அடியார் பக்தியை நன்கு காட்டுவவாகும்.)

—தந்தைதாய்
வேணு புரக்கோலம் விழி மிழலை
யிடைப்
பேணும் வகைபார்த்த பிள்ளையும்
(திருஞானசம்பந்த நாயனர்)
—பூணுமருள்
மெய்யாக் கயிலைமலை வீற்றிருந்த
தன்கோலம்
ஐயாற்றிற் கண்டருளென்
னப்பனும்
(திருநாவுக்கரசு நாயனர்)
—எய்யாமல்
ஆடிச் சிவக்கும் அடியைத்தென்
னூரிற்
பாடிச் சிவப்பேற்றும் பாவலனும்
(சுந்தரமூர்த்திநாயனர்)
—கூடற்குள்
ஆசில் வழுதி யரசற்குச் சம்புவால்
(பரமசிவனல், நரியால்)
வாசி (குதிரை) வரவழைத்த
மந்திரியும் (மாணிக்கவாசகர்)
—வீசுதிரை
சேர்க்குங் கடற்புவிக்குட் டெய்வச்
சிவலோகம்
பார்க்க வரவழைத்த பார்த்தி
வனும்
(வரகுணபாண்டியர்; சிவலோகம் வருவித்ததை, திருவிளையாடலில் வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலத்தாலுணர்க)
—நீர்க்குடிலப்
பொன்முடிக்கு ளன்றிப் புனைபாத்
திருக்கொன்றை
தன்முடிக்குள் வாங்கித் தரிப்
போனும்
(தண்டீசர்; இவரைப்பற்றித் தேவாரத்தில்
"அங்கரவத் திருவடிக்காட்
பிழைப்பத் தந்தை
யந்தணனை யறவெறிந்தார்க்
கருளப்போதே,
கொங்கரவச் சடைக்கொன்றை
கொடுத்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங்
கூத்தனரே"
என்று கூறப்படுதலுங் காண்க.)

ஆகிய இவர்கள் தத்தம் அணியூர்தியினும் சேமத் திருவாடுதண்டினும் ஏறிச் சென்றனர். நாற்பத்தெண்ணாயிரம் முனிவரும், தில்லை வாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச் சார்ந்தார் என்னும் ஒன்பான் கூட்ட மாதவரும், வேதபாரகரும் (வைதிகப் பிராமணர்) தெய்வத் திருமேனி தீண்டத் தவம்பெற்ற சைவப்பெருமறையோராது (ஆதிசைவப் பிராமணர்கள்) கூட்டமும், பாட்டோதும் பரிசனரும், தீர்க்கதபோதனரும், பதினெண்மடத்தாரும் பிறரும் வந்தனர். சிவகாரியங்கள் செய்யுந் திருத்தொண்டர் திரளும் வந்தது. நிருத்தஞ் செய்யும் "செம்பொனிதழ்க் கும்பமுலைச் சேல்நயனப் பால்வயனத் தம்பொனிறத் தேவரடியாரும்" வந்தனர். திரைவெள்ளமோ என்னும்படி இத்திரள் வீதிக்கரையிற் புரள உலாபோந்தது. தும்புருநாரதராகிய இருவரும் யாழ்மூரன்றனர், சிவகணத்தலைவர்களி லொருவனுகிய பாணுகம்பன் தன் ஆயிரம் வாய்களினும் ஆயிரஞ் சங்குகளை வைத்து ஊதினன். வாணாசுரன் குடமுழவம் வாசித்தான். ஆனய நாயனர் பஞ்சாக்கரத்தோடு விரவுங் குழலோசையை ஐயன் செவிக்கு இன்னமுது என்னும்படி அள்ளி ஊற்றினர். சம்பந்தர் கைத்தாளந் தாக்கினர். திருநீலகண்டரெனும் எம்பெரும் பாணர் இசை கூட்டினர். குருடு, தடாரி, தக்கை, மொந்தை, பதலை, இரலை, திமிலை, முரசு எனும் வாத்தியங்கள் ஏங்கின. "திரையெறியும் வையைநதித் தீரன் வந்தான்; மணிகர்ணிகைத் தீர்த்தத்தையுடைய சிவன் வந்தான்; நவக்கிரகங்களும் நக்ஷத்திரங்களும் நாளும் வலஞ்செய்யும் ஊரையுடையவன் வந்தான்; பழவினை வேரறுப்பான் வந்தான்; பருவெண் மழவிடை யேறுயர்த்தான் வந்தான்" என்றென்று சின்னங்கள் எடுத்தெடுத்தார்த்தன. நதிமாதர், கோகநகமாதர் (கோகநகம்—தாமரை; எனவே இலக்குமியும் கலைமகளும்) தெய்வமதிமாதர் (சந்திரனுடைய தேவிமார்) நீடுவசுமாதர் என்றித் தொடக்கத்தினராகிய அந்தரமாதர் அனைவரும் வந்தனர்.

—சிந்தைமகிழ்
கோலங்காட் டித்தான் குனிக்குந்
திருக்கூத்தை
யாலங்காட் டிற்பார்க்கு மம்மை
யரும் (காரைக்காலம்மையார்)
—மூலங்காண்
சீரிசை ஆடிகிழற் செம்மல் தனைப்
பயந்த
பேரிசை ஞானிப் பிராட்டியரும்
(இசைஞானியார்)
—வரிசைதென்
சையத் தமிழ்நாட்டிற் சைவந்
தலையெடுப்பச்
செய்விக்கும் பாண்டிமாதேவியரும்
(மங்கையர்க்கரசியார்)
—உய்விக்கும்
அந்தண் வயற்பொலிதென்
னூரின் நம்பிக்கா
வந்துலகி லுற்பவித்த மங்கையரும்
(பரவையாரும் சங்கிலியாரும்)

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவேதாசுவரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

(ச) தமேகநேமிம் த்ரிவ்ருதம்
ஷோடசாந்தம்
ஶதார்த்தாரம் விம்ஶதி
ப்ரத்யராபி:] அப்ஜகை:
ஷட்பிர் விஸ்வரூபைகபாஶம்
த்ரிமார்கபேதம் த்வி—
நிமித் தைகமோஹம்]

இ-ள் ஏகநேமிம்-(சக்கராந்தம்
என்னும்) ஒரு நேமியும், த்ரிவ்ருதம்
-மூன்று வலயங்களும், ஷோடஶா
ந்தம்-பதினாறு அந்தங்களும், ஷட்
பி: அப்ஜகை:-ஆறு (ஆதாரத்) தாம
ரைகளுக்குரிய, விம்ஶதிப்ரத்யரா
பி:-இருபது பிரதியிதழ்களோடு
கூடிய, ஶதார்த அரம்-ஐம்பது
இதழ்களும், விஸ்வரூப ஏகபாஶம்-
விசுவரூபமாகிய ஒரு கயிறும், த்ரி
மார்க பேதம்-மூன்று வழிகளின்
பேதமும், த்விநிமித்த ஏகமோஹம்
-இரண்டற்கு நிமித்தமாகிய ஒரு
இச்சையும் ஆகிய இவற்றையுடைய
(ஒரு சக்கரமாக) தம்-அவனை (அவர்
கள் கண்டார்கள்-எ-று.)

எழுவாய் பயனிலைகள் மேல் மந்தி
ரத்திலிருந்து வருவிக்கப்பட்டன.

ஆறு தாமரைகளுக்குரிய ஐம்பது
இதழ்கள் என இயையும் கு-பு-
முனிவர்கள் தியான யோகத்தி
லிருந்து கண்ட பராசத்தியை ஓர்
சக்கர வடிவமாக இம்மந்திரம் உருவ
கம் பண்ணிக் காட்டுகின்றது.

ஏகநேமிம்- 'நேமி'=சக்கராந்தம்'
அது சக்கரத்தின் இலைகளைத்தாங்கி
நிற்கும் 'அாரமி' என்னுங் குடத்
திற்காயிற்று. "தத்யதாரேஷுநேமி
ர்பிதா நா பா வ ரா ர் பி தா" என்
றது சுருதி. அருட் பராசத்தியின்
பேதமாகிய ஆதிசத்தி என்னும்
திரோதான சத்தியே ஈண்டு 'ஏக
நேமி' யெனப்பட்டது; எல்லாவற்றை
யும் பரித்து நிற்பது அதுவேயாக
லின் 'உண்மையால் நோக்குமிடத்
துச் சத்தியின் சொரூபத்திற் பேத
மிலலை, தொழில் வேறுபாடு பற்றி
யும் இடவேறுபாடு பற்றியும் சத்தி
பேதம் கற்பித்துக் கூறப்படுகின்
றது. சிவசத்திகளின் பேதங் கூறு
மிடங்களி லெல்லாம் இவ்வாறே
கொள்க. புறப் பொருளை நோக்கி
நிற்கும் நிலையிற் சத்தி யெனவும்,
தன்னிலையிற் சிவ மெனவும் கூறப்
படுவ தன்றிச் சிவசத்திகட்கும் தம்
முட் பேதமில்லை.

(உ) த்ரிவிருதம்-மூன்று வலயங்
கள். அவையாவன;-ஐந்தொழில்
செய்தல் முதல்வனுக் கிலக்கணம்
என்பது இவ்வத்தியாயத்து முத
லாம் மந்திரத்தாற் பெறப்பட்டது.
படவே; முதல்வன் தனது சத்தி
வியாபாரங்களை யெல்லா மொடுக்கிப்
பகுப்பின்றி நிற்கும் இலயாவத்தை
தையும், ஒடுங்கிய உலகினை மீளத்
தோற்றுவித்தற் பொருட்டுத்
தனது ஞானசத்தி, கிரியா சத்தி
களில் உன்முகியாய் நிற்கும் போகா
வத்தையும், காரியங்களைச் சூக்கும
மாயும் தூலமாயும் தோற்றுவிக்கும்
அதிகார அவத்தையும் ஆகிய மூன்
றவத்தையும் அம்முதல்வ னிடத்
திலுண் டென்பதும் பெற்றாம். இம்
மூன்றற்கு மிடமாய்ச் சுத்தமாயை
யில் பராசத்தியாற் கலக்குண்டு
தோற்றிய இலய தத்துவம், போக
தத்துவம், அதிகார தத்துவம் என்
னும் மூன்று தத்துவங்களும் மூன்று
வலயங்க ளெனப்பட்டன. அவை
யே ஒடுங்கு முறைபற்றி, சுத்தவித்
தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி,
சிவம் என ஐந்து தத்துவங்களாய்
விரியும். அவற்றி னியல்பெல்லாம்
சைவசித்தாந்த நூல்களிலும் ஆக
மங்களிலுங் காண்க.

(ந) ஷோடஶாந்தம்-சத்தியின்
பதினாறு பேதங்கள் பதினாறு அந்
தங்களாகக் கூறப்பட்டன; அவை
யாவன:- 1. ஜநநீ, 2. ரோதயித்ரீ,
3. கோப்த்ரீ, 4. நேத்ரீ, 5. யோக்
த்ரீ, 6. திராணு, 7. வாமா, 8. நியா
மிகா, 9. ரௌத்ரீ, 10. பிலாவிகா,
11. சிரத்தா, 12. பாவிநீ என்னும்
இப்பன்னிரண்டோடு; 1. பிரஹலா
திநீ, 2. ஸ்தம்பிநீ, 3. விகாரா, 4.
அபரா என்னும் நான்கும் கூட்டிச்
சத்திபேதம் பதினாறுங் கண்டு
கொள்க. இவ்வாறு மதங்கத்துட்
கூறப்பட்டது. இவற்றி னியல்புகளை
யெல்லாம் அவ்வாகமத்தில் பதி
பதார்த்த சத்திபடலத்துட் காண்க.

ஷோடசாந்தம் என்பதற்கு இவ்
வாறன்றி உன்மனை முதலிய பதி
னாறு கலைகளென்று கூறினுமாம்;
அக்கலைகளாவன: உன்மனை, சமனை,
வியாபிநி, சத்தி, நாதாந்தம், நாதம்,
நிரோதி, அர்த்தசந்திரம், விந்து,
அகாரம், உகாரம், மகாரம், வியோ
மரூபை, அநந்தை, அநாதை, அநாசி
ருதை என்பனவாம். இவை சோட
சகலாப் பிராசாதம் என வழங்கப்
படும்.

(ச) விம்ஶதிப்ரத்யராபி: இரு
பது பிரதி அரங்கள். அவை என்
னென்ன என்பது நன்கு புலப்பட
வில்லை. பிரதி என்ற சொல்லிற்கு:
பதிலான, வேறான, சமீபமான
எனப் பல பொருள்களு முண்டு.
சக்கரத்தின் உறுப்புக ளெல்லாம்
அரம் என்று வழங்கப்படுவ துண்
டாயின் மேலே கூறிய ஏகநேமி
என்றது முதலிய இருபதையுங்
கொளல் பொருந்தும் அல்லது சமீ
பம் என்னும் பொருளில், உ0 என்
னும் எண்ணை நோக்கி வரும் ஆறு
தாரத் தாமரைகளுக்குரிய ஐம்பது
அரங்கள் என்று கொள்ளலாம்.
இதனை அறிஞர்களது ஆராய்ச்
சிக்கு விட்டு விடுகின்றோம். இங்கு
கூறிய வேனையவும் அறிஞர்களின்
ஆராய்ச்சிக்குரியனவே.

(ரு) அப்ஜகை: ஷட்பி:ஶதார்த்த
அரம்-ஆறுதாராத் தாமரைகளுக்
குரிய ஐம்பது இதழ்கள், அவை:—
மூலாதாரம்-நாலிதழ்த் தாமரை,
சுவாதிட்டானம்—ஆறிதழ்த் தாம
ரை, மணிபூரகம-பத்திதழ்த் தாம
ரை, அநாகதம்-பன்னிரண்டிதழ்த்
தாமரை, விசுத்தி-பதினாறிதழ்த்
தாமரை, ஆக்கினை-இரண்டிதழ்த்
தாமரை, ஆக ஐம்பது இதழ்களும்
கண்டுகொள்க. 'அப்ஜகை' என்
னும் பாடம் நாராயண பாடியத்துட்
கண்டது. அவர் (நாராயணர்)
'அக்ஷகை:' என்று மொரு பாட
மிருப்பதாகக் கொண்டு; அங்ஙனமா
யின் அகரம் முதல் க்ஷகர மிறுதி
யாகிய ஐம்பது வர்ணங்கள் (எழுத்
துக்கள்)ஐம்பது இதழ்களைக் குறிக்
குமென்றனர். சங்கார் சங்கரானந்
தர் முதலிய வேனைப் பாடியகாரர்
'அஷ்டகை:-ஷட்பி:' என்றே பாடங்
கொண்டனர்.

(சு) விஸ்வரூப ஏகபாஶம்-விசுவ
ரூபமாகிய ஒரு கயிறு சரமும் அசர
முமாகிய எலலாப் பொருள்களிலும்
அந்தரியாமியாய் நின்று அவற்றை
யாட்டி வைக்கின்ற (செலுத்து
கின்ற) 'சர்வதோமுகம்' என்னும்
நிலை ஒரு கயிறு எனப்பட்டது.'சூத்
திரதார்' என்னும் வழக்குண்மை
காண்க.

(எ) திரிமார்கபேதம்- மூன்று
வழிகளின் பேதம். மூன்று வழிக
ளாவன: கர்மம், பக்தி, ஞானம்
என்பன. அல்லது சிவாகமங்களாற்
கூறக்கிடந்த சிவஞானப் பேற்றிற்கு
வழியாய்ப் [illegible] கர்மம்,
பக்தி, யோகம் என்னும் [illegible]

# மணிப்பிரவாள நூல்கள் 2

(திரு. அ. வி. மயில்வாகனம், ரேயல்கல்லூரி)

## மேருமந்தர புராணம் (உரை)

இது 14-ம் நூற்றுண்டு வரையில்
வெளிவந்த ஒரு நூல். இதன் உரை
அப்பாசாமி என்போரால் மிக அண்
மையில் எழுதியுளதேனும் பழைய
மணிப்பிரவாள உரைகளின் ஆதிக்
கம் இதனுள் தோன்றுகின்றது.
இவ்வுரையாசிரியர் தம்முரையை
எழுதும்போது 'பகவத் விஷயம்'
முதலிய உரைகளைத் துணையாகக்
கொண்டிருக்கின்றனர் போலும்.

இவ்வுரையுள் ஒரு சிறப்பு மிக
வும் வெளிப்படையல்லபோலத்தோன்
றவதுண்டு. அஃதியாதெனில்
எளிய இலகுவான தமிழ்ப்பதங்க
ளுக்குக் கடினமான செவிக்குவ
வாச் சங்கதச்சொற்களை விளக்கமா
கத் தந்தமையே. இனி, வடசொல்
வருமிடத்தும் அதன் விளக்கம்
வடசொல்லாகவே காணப்படும்.
சில உதாரணம் வருமாறு:-ப. 68.
சிறப்பு=பரிநிர்வாண பூஜை, படிமம்
ப்ரதிமாபோகம், வியப்பு= ஆச்சரி
யம், குழல்=அளகம் அஞ்சு=பயப்
படுவது etc 'அட' என்பதை 'ஸ்வ
ச்சலப்ரகாஷோக்தி என்று விளக்கு
கின்றார். இப்படி இன்னும் பல+
இப்படிப்பட்ட ஒரு விளக்கவுரை
அந்தக்காலத்திலிருந்த வடமொழிப்
பண்டிதர்களுக்கு வேண்டியனவா
கக் காணப்பட்டது போலும். அல்
லது பீடும் அணிகெழுமீபாக்கும்
றபெற்றத் தம்நடை தலைநிமிர்த்தி
இயலல்வேண்டுமென்று விரும்
பியோ அவ்வாசிரியர் இப்படி எழு
திவிட்டனர், தத்துவார்த்தம்
பொருந்திய நூல்கள் எல்லாருக்கும்
எளிதில் விளங்காதிருத்தல் வேண்
டுமெனக்கருதியும் அவர் இப்படி
எழுதியிருக்கலாம்.

எழுத்துக்களில்கூட சங்கதமும்
தமிழும் விரவியுள. நூற்
றுக்கு 75 வீதம் வடமொழிக்
கலப்பு இதனுள் உண்டு. கிரந்தத்
துள் 'ஜெ' எனவரும் எழுத்தை
இவர் 'ஜை' எனக் கலப்பெழுத்தா
கக் கொண்டுளர். வினைவிகுதிகள்
இடைச்சொற்கள், வேற்றுமை உரு
புகள் மாத்திரமே தமிழிலிருந்து
பெற்றனவாகக் காண்கின்றன.
ஒருசிறுபாகம் வருமாறு:- *"இங்ங
னம் கூறியதனுல் ஸஜ்ஜிஜீவன்களில்
கருமோப சம்மத்தால் ஸம்யக்
ஞானமும் குருமோதயத்தால் மித்
தியாஞானமும் வர்த்திக்கும் அஸ
ஜ்ஜி ஜீவன்களெல்லாம் கருமோத
யத்தினலான மித்தியாஞானங்களி
லேயேவர்த்திக்கும்." இவ்வுரை ஆசிரி
யர் மறுநூல்களிற்போல ஞானம்,
மித்யா, ஸம்யக் என்னுது சிறுஅள
விறகேனும் தமிழ்வழக்கைப் பின்

+ M. V, Lexicon Vol. VI page XXXV. and Glossary of the Vaishnava Commentaries (O. M. L.) un published.

* P. 606 Stz. - 1323.

சரியை, கிரியை, யோக மெனினு
மிழுக்காது.

(அ) த்விநிமித்த ஏகமோஹம்—
இரண்டற்கு நிமித்தமாகிய ஒரு
இச்சை. முதல்வனது ஞானசத்தி
கிரியாசத்தி என்னும் இரு சத்தி
களின் தொழிற்பாட்டுக்கு நிமித்த
மாய், உயிர்களை மல இருளினின்
றெடுத்துத் தன் திருவடிக்கீழிருத்
துவதாகிய பேரின்ப வாழ்வினை
அவற்றிற்குத் தரும் அவனது
பெருங்கருணை வடிவாகிய இச்சா
சத்தி 'இச்சை' (மோஹம்) எனப்
பட்டது.

—தொடரும்.

பற்றியுள்ளார். பிறவிடமெல்லாம்
முன்னைய நூல்போலவே.

நீலகேசி:-

"அருகன் திருவறத் தன்புசெய்
வாரும் அழிவழக்காற்
பெருகுந் திருநெறிப் பீடழிப்
பாரும்இப் பேருலகில்
பொருவின்றிநின்ற தமிழ் நீல
கேசிப் பொருளையெல்லாம்
திரிவின்றிக் காட்டும் சமயதிவா
கரஞ் சேவிக்கவே"

இந்நூலிற்கு ஆசிரியர் யாரெ
னத் தோன்றவில்லை. ஜயின மதத்
தின் தத்துவார்த்தங்களை மிகவிரி
வுற விளக்கும்நூல் இதுபோன்று
வேறில்லை. தம்கோள் நிறுவும்
பொழுதெல்லாம் இதன் ஆசிரியர்
பௌத்தமதக் கொள்கைகளைக் கண்
டிப்பதையும் காணலாம். இது7-ம்
நூற்றுண்டு வரையில் எழுதிய
நூல்.

மேற்கூறிய பாட்டிலிருந்து இத
ற்கு உரைசெய்தவர் சமய திவாகரர்
என்று அறியலாகும். இவரே மேரு
மந்தர புராணத்தின் ஆசிரியருமா
வர். கல்வெட்டு ஆராய்ச்சி முதலி
யன இவ்வாசிரியர் 14ஆம் நூற்று
ண்டினர் என்னும் மேலே கூறிய
சிறப்புப் பாயிரத்திலிருந்து இவ்
வுரை ஜயினமதத்தினர் பலர் கூடி
அங்கீகரித்த ஒப்புயர்வற்ற நூலெ
னக்கொள்ள இடமுண்டு. ✳இந்
நூலைப் பிரசுரித்தோர் முதலாக
ஏனைய ஜயினரும் இவ்வுரையாசிரி
யரை:-'உபயபாஷைச் சக்கரவர்த்தி'
என்று சூட்டுநாமம் (Pseudonym)
இடலாமெனக் கூறுகின்றனர்.
அவருடைய சீரிய சிறந்த நடையும்
திவ்விய கருத்தும் கூரிய புத்தியின்
ஆட்சியுமே இதற்குக் காரணமாகு
மென்கின்றனர்.

இந்நூல்களுள் 'ப்' எனும் எழு
த்து நன்கு உச்சரிக்கப்படுவதில்லைப்
போலும். இவ்வுரையாசிரியர் மாத்
திரமன்றி, ஜயினர் பலர் அப்பெற்
றியர்போல் தோன்றுகின்றது.
அவர் பெரும்பாலும் 'ப்த்' ஆகவே
எழுதுகிறார். உம்-ஆப்தன்=ஆத்
தன். அன்றியும் அநேகம், பிர
யோஜநம், அஜ்ஞாநம், என்றெல்
லாம் 'ன'விற்கு 'ந' வருமாறு எழு
துவர். இவர் முற்கோள் முழுமை
யும் கிரந்தத்திலதானே இருக்கும்.
ஏனைய கலப்பாகவிருக்கும். உரை
யை விரிக்கவேண்டிய இடமெல்
லாம் மிகவிரித்துத் தத்துவார்த்தப்
பொருளெல்லாம் கூறி முடிப்பாரா
யினும் விளக்கவேண்டாவிடத்தெல்
லாம் சிறுகவுரை கூறிச் செல்வர் இவ்
வாசிரியர். ஆதலின் இவர் முறை
யானது நச்சினார்க்கினியர் சிந்தா
மணியுரையுட் பின்பற்றிய முறை
யை ஒருவாறு தழுவியுள்ளது என்
னலாம்.

புத்தரை இளிவுபடுத்த எழுதிய
விடத்து ஒருபாகம் இங்கு எடுத்துக்
காட்டாகத் தரப்படும். இதுநல்ல
மணிப்பிரவாளநடை. †புத்தன்
க்ஷணபங்கம் சொல்லுகின்ற விட
த்துஸ/வ க்ஷணபங்கம்வேண்டார்க்
குச்சொல்லுவான், பூர்வக்ஷணவர்த்
தியாகிய யான் கையறக்கெட்டேன்,
அபரக்ஷணவர்த்தியாகிய யானவ
னின் அதயர்தம் அநகியனென்றான்
.......ஒரு தேவதத்தன் கள்வரை
யறியாதான். கள்வராவார் பகலிலில்
லந்தோறும் புகுந்து பார்த்துப்
போய் இரவு வந்து பொருள் களவு
காண்பரென்பது கேட்டு, பிக்ஷை
புகுந்து இல்லந்தோறும் பார்த்துப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

✳Prof-Chakkaravatti — But his statement is not final.

† Commentary to stz. 195.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்பிரவாள நூல்கள் 2

3-ம் பக்கத் தொடர்ச்சி

போகாநின்ற தபோதனனைக் கண்டு கள்வனென்றஞ்சிக் கிடந்தான். நித்திராவசத்தாற் றன்வஸ்திரஞ்சழலத் தடவிப்பார்த்து, வஸ்திரங் காணாமையினாற் கள்வனென்று கூப்பிட்டான், கூப்பிட எல்லோரும் ஓடிவந்து கள்வனெங்குற்றானெனத் தன்னை விட்டுவைத்து என்னைக் கொண்டுபோனானென்று சொன்னானவனே போலும் என்றவாறு.''

இதனுள் முதற்பாகம் வடமொழிக் கலப்புடையதாயினும் இரண்டாம்பாகம் பெரும்பாலும் சிரிய நடையையே கையாண்டுள்ளமையைக் காட்டும். தமிழ்ச் சொற்களும் கூட உள. பின்பாகத்துள் ஒருகதை நிகழுகின்றபடியால்—"கள்வன்"; 'கள்வன் எங்குற்றான்?''; "தன்னை விட்டுவைத்து என்னைக் கொண்டுபோனான்'; என்பன ஈரடைப்புக்குறியுள் வரவேண்டியனவாகும்.

இனி, களவுகாணல், கள்வனென்று கூப்பிடல், விட்டுவைத்தல், பிச்சைபுகல்— முதலியன அக்கால வழக்குப்போலும். இவை பிற்காலத்தில் களவெடுத்தல், கள்வனென்று சத்தமிடல், விட்டுவிடல், பிச்சையெடுத்தல், என மாறிவிட்டன. ஆயினும் பரிமேலழகர்—காணல், வைத்தல் என்பனவற்றை இக்கருத்துடனேயே உபயோகித்திருப்பதையும் காணலாம். 'பிச்சை புகினும் கற்கைநன்றே' என்றுவரும் தொன்மைவாய்ந்த அடியையும் நோக்குக. கடைசியடிகளுள், உயிர் உடம்பைக் கொள்ளலும் உடம்பை உயிர் பற்றலுமாகிய பௌத்தக் கொள்கைகள் ஜயினரால் இழிவுபடுத்தப்படுவதையும் காண்க.

இனி, உரையாசிரியர் கதை சொல்லும்பொழுது எளிய இனிய நடையையும் தத்துவவிளக்கம் கூறுமிடத்துக் கொழுத்த மணிப்பிரவாள நடையையும் பாவிப்பர். உம். பா-215, 217, 219, 258 etc "பூர்வகக்ஷண சித்தியற்யுமாறென்னை? அறியின், அக்யசித்தமும் அறிக. ஸ்வர்ஸிக்க அத்விதஜ்ஞாநரூபமாகிய etc" என்று இயலுவது அவற்றுள் ஒன்று. ஆயினும் இங்குள்ள வினைமுடிபுகள் தனித்தமிழ் சொற்களே||.

விட்ட சொல்லிலிருந்து தொட்டுச் செல்லும் வழக்கம் கதைகட்டும் ஆசிரியருக்கு மிகவும் உவப்புடையது. அது கதைத்தொடர்பை ஒருபோதும் வழுவவிடாது என்க. இவ்வுரையுள்ளும் அவ்வழக்குச் சிலவிடத்தில் உண்டு. ‡ மேற்கூறிய பாக்களுள் சில அப்படி உரையை உடையன.

இந்நூற்பதிப்பாளரின் கொள்கைப்படி, இவ்வுரை, ஜயினர் எழுதிய உரைகளுட் சிறந்ததாகும். எனினும் இது மணிப்பிரவாளநடையுடையதென்பதை நாம் மறந்துவிடுவோமா?

ஜீவசம் போதனை—இது 12-ம் நூற்றாண்டு வரையில் ஜயினர் தேவேந்திரமுனி எழுதியது. மூலத்துள் நேரிசை வெண்பா, விருத்தப்பா, சிற்சில ஆசிரியப்பா, முதலிய உள. இதன் உரை ஒருபொழிப்புரைபோலும். சிலசிங்கரோக்காக அமைந்துள. வசனம் ஒழிய, ஏனைய பாவடிகளை உரையடியாக்கினாற் போலிருக்கும். உம:- பா 15 "இன்னதொல் சிறப்புடைய ராஜமஹாநகரத் தன்னதொல்

---

|| என்றான், கிடந்தான், என்றவாறு.

‡ 1 அப்படியானது. ஆகவே etc
2 போய்விடும். விடின் etc

# அறிவித்தல்

1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதிக்குப் பின்னர் சகல 5 சத நோட்டுகளும் சட்டப்படி செல்ல மாட்டா.

இத்திகதிக்குப்பின்னர் இந்தநோட்டுகளையும் (2சதம் 3சதம் பெறுமதியான பாகங்களாகப் பிரிக்கப்பட்ட இந்த நோட்டுகளின் பாகங்களையும்) வைத்திருப்போர் கொழும்பு பொதுத் திறைசேரியில்தான் மாற்ற முடியும்.

இந்த நோட்டுகளை வைத்திருப்போர் இவைகளை 1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மீ 30-ந் தேதிக்கு முன்னர் வங்கிகளில் போடவேண்டும், அல்லது கச்சேரிகளில் மாற்றிக்கொள்ளவேண்டும்.

மாற்றிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் நோட்டுகள் அதிகமாக வில்லாவிட்டால் 1943-ம்ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதி வரைக்கும் தபாற்கந்தோர்களிலும் புகையிரத ஸ்தானங்களிலும் இந்த நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

எச். ஜே. ஹக்சாம்,
தலைவர், நாணயக்கொமிஷனர் சபை,
செக்கிறற்றேறியற்,
கொழும்பு.

(G. 22. 16-8 & 20-9 & 23-9-43)

# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

---

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5-8—31-12-43)

குணத் ததிபதியாவனோ வெனின் etc" என்பது. மேலும், வசனம் முடிவடையும்போதெல்லாம்-"யாது செய்தான், யாதருளிச் செய்தான், யாது சொன்னார்" என்று முடிவடையும். இவை பாரதவெண்பா வுரையை இம்முடிபில் ஒக்கும்.

ஒருவசனம் வருமாறு:- பா 20 "மஹாராஜற்கு என்வரவு அறிவிப்பீராமினென, துவாரபாலகனுங்கதுமெனச் சென்று, தங்கோனுக்கு அறிவிப்ப, அவனும் ஸீஉப்ராம் வருக என்றலும் வநபாலகனும் வந்து மஹாராஜனை நமஸ்கரித்து யாது சொன்னான்;" என்பது. இங்கு 6 கிரந்த எழுத்து வந்துள வடமொழிக்கலப்பு 36 விகிதமே. அறிவிப்பீராமின், தங்கோன், வநபாலகன் என்பன பீடுடைநடைக்குரியன. இதன் போக்கும் அப்படியே.

ஜயின ராமாயணம்:—நாம் வடமொழியிலும் தமிழிலும் காணும் இராமாயணம் வேறு, இந்த நூல் வேறு. இஃது அஹிம்சைப்போர் புரிகின்றது! இராவணன் ஒருசாது, அகிம்சையைத்தழுவும் நைட்டிகன்! சீதை அவனுக்கு மகள்! கடலில் கலங்கவிழ, ஓடமேறி அலையுண்டு மெல்ல மெல்ல நாவலந்தீவடைந்து அங்கே இராமனை மணக்கின்றாள். இந்நூல் மணிப்பிரவாளமன்றி வடமொழி எழுத்தெனினும் சாலும்.

இதுவரையும் சிறந்த ஜயின உரைநூல் எடுத்து [illegible] இனி வைணவ உரை [illegible]

# கடிதம்

சுகாதாரமந்திரி கந்தோர்
கொழும்பு 10-8-43

அன்பார்ந்த ஐயா,

அம்பாந்தோட்டையில் ஒரு கயரோக ஆரோக்கிய நிலையம் நிறுவுதற்கு சனங்கள் பணம் உபகரிக்கும்படி ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஞாபகார்த்த நிதியின் நிர்வாகசபையின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுத்தற்கு தாங்கள் இடமளிப்பின், நான் மிகவும் நன்றியுள்ளவனாவேன்.

ஐந்தாம ஜோர்ஜ் மன்னர் ஞாபகார்த்த நிதி 1937ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் தேசாதிபதியாயிருந்த சேர். எட்வேட் ஸ்ரப்ஸ் அவர்கள் தலைமை வகித்த மாபெருங்கூட்டத்தில், காலஞ்சென்ற ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் ஞாபகார்த்தமாக ஒரு கயரோக ஆரோக்கிய நிலையங்கள் நிறுவுவதற்கு இந்நிதியில் சேரும் பணத்தைப் பயன்படுத்தவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது. இந்த நிதியைப் பரிபாலிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட நிர்வாகசபை, சுகாதார வைத்திய அதிகாரியுடன் கலந்தாலோசித்து வெலிசறையிலும் அம்பாந்தோட்டையிலும் இவ்விரு நிலையங்களையும் அமைக்கத் தீர்மானித்திருக்கிறது. இதுவரை சேர்ந்த பணத்தொகை 136, 241:45 ரூபாவாகும். இதேயளவு தொகையை அரசாங்கமும் தந்திருக்கிறது.

வெலிசறையில் கயரோக ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவும் வேலை முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டது. அவ்விடத்தில் குடிகளால் நன்கு மதிக்கப்பட்ட அரசருக்குத் தகுந்த ஞாபகார்த்தமாக விளங்குதற்குரிய கட்டடம் அமைக்கப்பெற்றது. யுத்தத்தால் ஏற்பட்ட அத்தியாவசியமான கருமங்களால் இந்தத் திட்டம் ஒருவகையில் நன்மையடைந்துவிட்டதென்றேசொல்லலாம். வேறு அவசிய நோக்கத்துக்காக இந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தவேண்டி நேர்ந்தால், மிகவும் உபயோகமான தளவாடங்களும் உபகரணங்களும் சேர்க்கப்பட்டுக் கூடுதலான கட்டடங்களும் அமைக்கப்பெற்றுள்ளன. இங்ஙனம் கூடுதலாக அமைக்கப்பெற்ற கட்டடம் முதலியவற்றை அரசாங்கம் மிகவும் சகாயமான முறையில் வாங்கியுள்ளது. இந்த ஆஸ்பத்திரியில முதலில் 300 படுக்கைகள் வைப்பதற்குரிய வசதியளிக்கவே கருதப்பட்டது. ஆனால், இப்பொழுது 600 படுக்கைகள் வைப்பதற்கேற்ற விசாலமுள்ளதாக இருக்கிறது.

ஆனாலும் இந்தக் கட்டடங்களை இன்னும் சில வருஷங்களுக்கு ஒரு கயரோக ஆஸ்பத்திரியாக உபயோகிப்பதற்கு வசதிப்படாது போகுமாதலால், அம்பாந்தோட்டையில நிறுவக்கருதிய ஆரோக்கிய நிலையத்தை இனிமேல் பின்போடக்கூடாதென்றும், உடனேயே அதனைத் தொடங்கவேண்டுமென்றும், மேற்கூறிய நிதியின் நிர்வாகசபை தீர்மானித்திருக்கின்றது.

ஆஸ்பத்திரிகளில் கயரோகிகளுக்கு ஏற்ற சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யாமல் இலங்கைத்தீவில கயரோகம் பரவுவதைத் தடுப்பதற்கு ஏற்ற வழிவகைகளைக் கையாள முடியாது. இப்பொழுது இத்தீவில் கயரோகிகள் சிகிச்சை பெறுவதற்கு விசேஷ நிலையங்கள் இருக்கின்றன. ருகமத்திலுள்ள இருதய சம்பந்தமான நோய்க்குச் சிகிச்சை செய்யும் ஆஸ்பத்திரி, கந்தானையிலுள்ள ஆரோக்கிய நிலையம், காங்கேசன்துறையிலுள்ள ஆரோக்கிய நிலையம் இவை மூன்றுந்தான் இருக்கின்றன. [illegible] ஆஸ்பத்திரிகளிலும் [illegible] சிகிச்சை செய்யப்படுகின்றது. சில ஆஸ்பத்திரிகளில் இவர்களுக்காகப் புறம்பான உவாட்டுகளும் இருக்கின்றன. ஆனால், இந்த நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்கென்றே ஏற்பட்ட வேறு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இல்லை.

ஆஸ்பத்திரிகளில் இப்படியான நோயாளிகளுக்கு ஏற்படுத்தியுள்ள இடம் கொஞ்சமாவது போதாது என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர். கயரோகம் இன்னும் இலங்கையில் பரவி வருகின்றதென்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தற்போதைய நிலைமை வசதியானதன்றெனினும், அம்பாந்தோட்டையில் ஆரோக்கிய நிலையத்தை உடனே கட்டத்தொடங்க வேண்டியது முக்கியமானதொரு விஷயமாகும்.

இலங்கைத்தீவிலுள்ள சனங்களுட் பெரும்பாலாரின் வறிய வாழ்க்கையும் துப்புரவற்ற நெருக்கமான வீடுகளும் உயிர்ச்சத்தற்ற உணவும் ஒருங்கு சேர்ந்து கயரோகம் பரவுவதற்கு வசதியளித்து, இந்நோயால் வருந்தும் குடும்பங்களுக்கு பெரும கெடுதியை உண்டாக்குகின்றன. கயரோக சிகிச்சை பெறுவதற்குரிய புதிய நிலையத்தை நிறுவுவதால், வியாதியைப் பரவாது தடுப்பதற்குக் கையாளவேண்டிய வழிவகைகளுள் முடிவானதொரு செய்கையை நிறைவேற்றிவிடாதிருந்தாலும், அங்ஙனமானது அநேக நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்து வருவதோடு, பிறருக்கு இந்நோய் பரவாது தடுத்தற்கும் உதவிசெய்யும் என்பதற் கையமில்லை. 300 நோயாளிகள் சிகிச்சை பெறக்கூடிய இடவசதியும், அங்கு வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் வசிப்பதற்கு இடவசதியும் அளிப்பதற்கான கயரோக ஆரோக்கிய நிலையத்தை அம்பாந்தோட்டையில் கட்டுவதற்கு ஐந்து லட்சம் ரூபா வேண்டுமென்று ஒரு திட்டம் போடப்பட்டிருக்கின்றது. இவ்வளவு போதாமையுள்ள திட்டத்தை இப்பொழுதிருக்கும் நிலைமையில் தொடங்கமுடியாது. என்றாலும் 100 அல்லது 150 நோயாளிகளுக்கு ஏற்ற இடவசதியும், தேவையான உத்தியோகத்தர்கள் வசிக்க இடவசதியும் உள்ள ஒரு மட்டான கட்டடத்தை முதலில தொடங்கி நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாம ஜோர்ஜ் மன்னர் ஞாபகார்த்த நிதியின் நிர்வாகசபையினர் இந்தக் கட்டடத்துக்காக 70,000 ரூபா கொடுக்கின்றனர். இதன்பொருட்டு 55,000 ரூபா தரும்படி இராசாங்கத்திடம் கேட்டிருக்கிறோம். இந்த இரண்டு தொகையும் சேர்ந்து 125,000 ரூபாவாகும். இததொகை கட்டடத்தை ஆரம்பிக்கப் போதாது. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சனங்களுடைய பண உதவியும் அத்தியாவசியம் என்பது நன்கு விளங்கும். 2000 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள் பணம் உதவினால் அவர்களுடைய நன்கொடையை ஞாபகமூட்டுவதற்காக ஏற்ற கல்லிற் செதுக்கப்பட்ட சாசனம் கட்டடத்தில் அமைக்கப்படும். தங்களுடைய பெயர்களை விளம்பரப்படுத்த விரும்பாதிருந்தால் அவர்களுடைய விருப்பப்படியே செய்யப்படும். பணம் உதவ விரும்புவோர், இந்நிதியின் தனாதிகாரியாகிய கௌரவம் பொருந்திய நிதிக்காரியதரிசி அவர்களுக்காவது எமக்காவது அனுப்பி வைக்கலாம்.

இவ்விதமான விண்ணப்பங்களுக்குச் சனங்கள் இதுவரை பின்நிற்காமல் மிகவும் தாராளமாய்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

அங்ஙனம் அணுகிய அக்கன்னிகை அந்த அரசகுமாரனை நாணமீதூர நோக்காதுநோக்கி "ஆடவர்திலகமே, நீர் இந்தப் பூஞ்சோலையையடைந்த காரணமும், உமதுவளநாடும், திருநாமமுமாகிய இவைகளையறிதற்கு ஆவல்கொண்டேன்" என்று பூவுதிர்ந்தவாறு ஒவ்வொரு மொழியாய் எடுத்தெடுத்துக் கனிவுகூர வினவினுள்; திருமகள் தானே தேடிவந்து வினவியவாறு தானுகவுந்துஊரும்பேரும் சீரும்கேட்ட அக்குயிலினுமினிய மொழியாள் குறிப்பையும் நோக்கையும் உணர்ந்த அரசகுமாரனாகிய தருமகுப்தன் அகப்பேதே ஆநந்தம் அடைந்தானுய், தன் விழிகளிரண்டும் அவளுடைய பேரழகைப் பருகப்பார்த்து "மெல்லி நல்லீர்! விதர்ப்பநாட்டையாண்ட சத்தியாதன மகாராசனுக்குப் புதல்வனுயுள்ளேன்; என் அன்னைபெயர் சதிதேவி; என்பிதா பகையரசரோடு சமர்புரிந்து யுத்தமுனையில் மாண்டு வீரசொர்க்கம் புக்கார்; நாடுநகரங்களையும் பதியையுமிழந்து தன் கற்புநெறியைக் காக்கும் வண்ணம் கானகத்தை ஓதுக்கிடமாகக் கொண்டு ஆங்கே புகுந்த எனது அரிய தாயார் என்னைப் பெற்றவுடன், அக்காட்டிலுள்ள தடாகத்திற் சஞ்சரித்த ஒரு முதலைவாய்ப்பட்டு மாண்டார். அந்த வேளையில் நான் அநாதக்குழவியாகத் தனியே கிடந்து கதற, அத்தடாக மார்க்கமாக வந்த உமையெனும் பார்ப்பனமாது என்மேல் இரங்கங்கொண்டு எடுத்துத் தான்பெற்ற ஆண்குழந்தைக்குத் தம்பியாக என்னை வளர்த்து வந்தாள்; வளர்த்துவரும் நாளில், சாண்டில்லிய முனிவரெனப்படும் பெரியார் எனக்கு உபதேசஞ்செய்து தருமகுப்தனெனப் பெயருமிட்டுத் தமியேனை அரனடிக்கன்பனுகச் செய்தார். இதுவே என் வரலாறு. உமாமகேசுவரனைப் பூசித்ததன் பயனுக, ஒக்கெழின்மிக்க மாமயிலனையீர்! உம்மை இந்த இடத்தில் நேரிற்பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றேன்; தவமிலார்க்கு உமது தரிசனம் கிட்டுமா! இவை இங்ஙனமாக, கஞ்சமலரிற் சஞ்சரிக்கும் அஞ்சமும் அஞ்சும் நடையீர்! உமது வரலாறு முழுவதையும் யான் அறியும்வண்ணம இயம்பவொண்ணுதா" என்று ஆர்வம் பெருக வினவினுள்.

தருமகுத்தன் வரலாறனைத்தையும் தன்செவி வாயாகக் கொண்டு இதழுறப் பருகியவளாகிய பேரழகிற் சிறந்த அக்கன்னிகை அகமும் ஆகமும் பூரிததாளாய்ப் புன்னகையரும்பக் குயிலெனப் புகலுகின்றுள்:

"ஆரமார் மார்பீர்! பொருப்பெனப் பொலிந்த தோளீர்; தமியேனை அஞ்சமதியென்றழைப்பர்; எமையாளும் உமையாளை இடப்பாகத்தில் வைத்தருளிய கைலாசபதியின் திருச்செவிக்கு உவப்பாக இனிய கானத்தைப் பாடுந்தொண்டு பூண்ட காந்தர்வர் தலைவனுகிய திரமிஷனுடைய மகளாவேன்; எனது தாயார் பெயர் தாரணி; பூர்வத்திற் செய்த புண்ணியம் பிடர்பிடித்துந்த இன்று இப்பூங்காவில் வந்து சேடியருடனே புனலாடிப் பூக்கொய்து விளையாடும்போது உமது திருக்கோலம் என் கண்களுக்குப் புலப்பட, என் சேடியரை வேறு காரணங் காட்டிப் பிரிந்து போகச்செய்து இங்குவரலானேன்; நான் இங்கு வருவதற்கு முந்தியே என்னுள்ளம் உம்மிடம் எனது அநுமதியுமின்றி வந்து சேர்ந்தது; மேலும்

"வானவர் வியப்ப மகரயாழ் நீவி
வரிநரம்பணி மிடறென்னக்
கானநன்குணர்ந்தோ ராயினுமுண
ராக் கானவிஞ்சைகள்
முழுதுணர்ந்தேன்,
ஞானநன்னிலையால் யாவர்தங்கருத்
தும் நசையையுங் குறிப்பினிலறிவேன்
வேனில் வேளனையாய்! என்னுழை
நினக்கு வேட்கையுண்டென்பதுங்
குறித்தேன்"

"ஆடவரும் பெண்மையை அவாவத் தூண்டும் பேரழகுடையீர்! விண்ணவரும் பாராட்டும் வண்ணம் மகரயாழ் தடவித் தேவகானஞ் செய்யப் பயின்றுள்ளேன்; எதிர்ப்படுவோரெவருடைய கருத்தையும் சொல்லாமலேயறியும் ஞானத்தையுமுற்றவப்பயனுற்பெற்றுள்ளேன். கந்தர்ப்பனும் நாணுங் கட்டழகுடையீர், உமது உள்ளக்குறிப்பையுணர்ந்தே நீர் நிற்குமிடந்தேடி வந்தேன் நீரே எனக்குத் தலைவராக வேண்டுமென்பது ஊழ் முறையாகும்; பரமபதியின் திருவுளமும் அப்படியேயாம். ஆனதால் எண்வகை மணங்களுள் எங்கள் குலத்திற்குரியதாகிய காந்தர்வமணத்தை இப்பொழுது கைக்கொள்வதே முறையாகும்"

## காந்தர்வமணம்

இங்ஙனம் அஞ்சுமதியென்னுங் கந்நர்வமகள் இயம்புதலும், தருமகுத்தனெனப்படும் அரசிளங் குமரன் அற்புதமடைந்தானுய்ச் செய்வதின்னதெனவறியாது தியங்கி நின்றுன்; காந்தருவகன்னி காலமும் மனமும் தரியாதவளாய்த் தன் மார்பிலணிந்திருந்த முத்தாரத்தை இரு கரங்களாலும் எடுத்துத் தருமகுத்தனுடைய தோள்களில்இட்டுப் பஞ்சாங்கமாக வீழ்ந்து அவனடி பணிந்தெழுந்து விநயத்தோடு மயிலென ஒதுங்கிநின்றுள். அக்கன்னிகையின் அன்பின் பெருக்கையும் நாயகபக்தியையும் அவதானித்த அரசகுமாரன் அகம்மிக மகிழ்ந்தானுய் அவளை ஆர்வமீதூரப் பார்த்து "ஆருயிரனையாய்! அன்னை தந்தையரையிழந்து அவராண்ட நாடிழந்து அபிமானத்தாய் வளர்க்க வறுமையோடு கூடி வளரும் அநாதனுகிய என்னை யாதும் யோசனையின்றி மாலையிட்டு மணாளனென வரித்தனை; நீ செய்த இச்செயலை உன் அரியபிதா அங்கீகரிப்பரோ என்பதையிட்டுத்தான் அஞ்சுகிறேன்" என்றுன்; தன் காதலன இங்ஙனம் இயம்பக்கேட்ட அஞ்சுமதி குறுமுறுவல் செய்து "என்னரசே, கேட்டருள்க, எனது தந்தையாரின் நோக்கமின்றி இந்த மங்கல கருமத்தை யான் செய்யத் துணிந்திலேன்; அந்த உண்மையை நீர் நாளை இவ்விடம் வரும்போது உமக்குத் தெருட்டி விடுகிறேன்; சஞ்சலப்படவேண்டாம், சென்று மீண்டு வருக" என்றுள. இருவரும் அரிதிற் பிரிந்தனர்; அஞ்சுமதி தனது பாங்கியர்சூழத் தந்தையின் மாளிகையடைந்தாள்; தருமகுத்தனும் தன் தாயும் தமையனும் வசிக்கும் இடத்தைநோக்கி மீண்டான்,

(வரும்)

## கல்கத்தாவில்மேலும் 68 பிச்சைக்காரர் கைது

கல்கத்தா ஆக 4—

இன்றும் பொலீசாரால் நகரிலுள்ள பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். விசேஷ மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்ட 68 பேர்களில் 65 பேர் பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பப்பட்டனர். விடுதியில் மொத்தப்புள்ளிவர் தொகை 190.

## புதிய தமிழ்ப் பேராசிரியர்

திரு. சுவாமி விபுலானந்தா அவர்களின் நியமனம்

சுவாமி விபுலானந்தா அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையின் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறுர்.

லண்டன் சர்வ கலாசாலையில் பி எஸ் ஸி கல்விப் பட்டம் பெற்ற சுவாமி விபுலானந்தா அவர்கள் 1921ம் ஆண்டு அண்ணாமலைச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகவும் கீழ்நாட்டுப் பாஷா பீடத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். இவர் ஏறக்குறைய மூன்று வருடகாலமாக இப்பதவிகளை வகித்து வந்தார். பின்னர் இலங்கையிற் கல்வித் தொண்டாற்றும் பொருட்டு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளைத் திருப்பியழைத்தது.

சுவாமி விபுலானந்தா அவர்கள் அண்ணாமலை இலங்கை சென்னைச் சர்வகலாசாலைகளின் தமிழ்ப் பரிசோதகராகக் கடமையாற்றியிருக்கிறுர்.

இவர் தமிழ்க்கலை பற்றியும் தமிழ்க் கலாசாரம் பற்றியும் ஆராய்ச்சி செய்து தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். "பண்டைக்காலத் தமிழ்ச்சங்கீதம்" என்னும் இவரது நூலொன்று பூர்த்தியாகிவிட்டது. பண்டைக்காலத்திலிருந்து 10ம் நூற்றுண்டுவரையுள்ள பல விவரங்கள் இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

### தாவர சாஸ்திரப் பேராசிரியர்

டாக்டர் பி. ஸி. சர்வாதிகாரி இலங்கைச் சர்வகலாசாலையின் தாவர சாஸ்திரப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறுர்.

பேராசிரியர் என். ஜி. பேரவின் ஸ்தானத்தை வகிக்க விருக்கும் டாக்டர். சர்வாதிகாரி சென்ற 16 வருட காலமாக இச்சர்வகலாசாலையின தாவர சாஸ்திரப் பகுதியிற் கடமையாற்றிவருகிறுர்.

## கொழும்புத் தமிழ்க் கழகம்

சங்கநூற் கருததுகள் சம்பந்தமான மூன்றுவது பிரசங்கம் கொழும்புத் தமிழ்க் கழகததில் சென்ற ஞாயிற்றுக்கிழமை(8-8-43) பிற்பகல் 5¾ மணிக்கு நடைபெற்றது. முதுதமிழ்ப் புலவர் திரு. மு. நல்லதம்பி 'குறிஞ்சிப் பாட்டை' ஆராய்ந்தார். பிரசங்கத்தின் பின்னர் ருசிகரமான ஒரு விவாதம் நடந்தது. திரு. சோ. வன்னிய சிங்கம் தமிழ் இலக்கியத்தில் விசேஷமான குணசித்திரங்களோ, அடிப்படையான பொதுத் தன்மைகளோ குறைவெனக் கூறினுர். திரு. குல. சபாநாதனும் திரு. வைரவப்பிள்ளையும் ஒருவகையான பாட்டில் எல்லா விதமான நயங்களையும் காண விரும்புவது பொருதத மற்றதென விவாதித்தனர். திரு. சோ. நடராஜன் தமிழ் இலக்கியங்களை மதிப்பிடுவதற்கு முற்றுக மேல்நாட்டு முறையைப் பின்பற்றுவதா அல்லது காமே 4ம் இலக்கிய பாம்பரையை அனுசரித்து ஒரு விமர்சன முறையை உருப்படுத்துவதா சிறந்ததெனக் கேட்டார்.

திரு. ஏ. வி. மயில்வாகனமும் விவாதத்திற் பங்கு பற்றினுர். கூட்டத்துக்குத் திரு. அ. சபாரத்தினம் தலைமை வகித்தார்.

22-8.43 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு திரு. சோம. சரவணபவன் 'நெடுநல்வாடை ஆராய்ச்சி' நடத்துவா ரெனக் கழகக் காரியதரிசி அறிவிக்கிறுர்.

## திருப்பூவணநாதருலா

2ம் பக்கத் தொடர்ச்சி

நின்று உருகி ஆரணச் செம்பொனடி போற்றினர். எம்பெருமானுந் தோரண வீதியினிற் றேன்றினுன். தேவர்கள் பாரிசாதவன மழை பெய்தனர். அதனுல் அந்த ஸ்தலத்துக்குப் புட்பவனமென்னும் பெயரைப் புதுக்கினர். புட்பவனப் புதுமையைப் பார்க்கவந்த கிளிகளோ, தம்மைப்போல நீலகண்டத்தைப் படைத்திருந்த இறைவனது கோலத்தைக் கண்டு களிப்பதற்காக வந்த மயிற்கூட்டமோ, இறைவனுடைய வாமபாகத்தமர்ந்த மின்னம்மையாரின் எழிலைப்பார்க்கவந்த மின்களோ, (மின்னம்மையாதலால் மின்கள் பார்க்க வந்தன என்னும் நயமுங் காண்க) சிவபிரானை வெல்லுதற்குத் தாருகாவனத்து முனிவர் தாம் அனுப்பிய ஒருமானை அவர் வசஞ்செய்து விட்டமையால், பல மானை விட்டால் அவர் வசஞ்செய்யாரென்று கருதி அனுப்பிய மான்கூட்டமோ, தக்கன் யாகத்தின் கண்ணே இந்திரனுகிய குயிலை இறைவன் ஈடழித்தமையால், அவன்மீது பழிவாங்குதற்காக குயில்கள் திரண்டுவந்த கூட்டமோ (இந்திரனுகிய குயிலை ஈடழித்த வரலாறு கந்தபுராணத்திலும் "மடிந்தனன் கூற்றுவனுகவாசவன், உடைந்தனன் குயிலெனவுருக்கொண் டும்பரின் நடந்தனனதுபொழு தண்ணல் கண்ணுறீஇ, தடிந்தனன் விட்டினன் தடக்கை வாளினுல்" (யாகசங்கார. 28) எனும் செய்யுளிற் கூறப்படுதல் காண்க. முன்னுளிற் பிரமனுகிய அன்னம் தேடியுங் காணமுடியாமற் றிரும்பிய வசைதீர நாம் கண்டறிவோமென்று அரன் முன்னிலையிற் கூடிய அன்னங்களின் கூட்டமோ என்னும்படியாக, முன்றில்களிலும், மாடமுகப்புக்களிலும், மேடைகளிலும், செய்குன்றுகளிலும், சாளரங்களிலும், கோபுரங்களிலும், நீர்க்கரைகளிலும் அரங்குகளிலும் தெற்றிகளிலும் (திண்ணைகள்) வீதியிலும் மாதர் எய்தினர். எய்தி, நம் "தெய்வப் பலாப் பழத்திற்கு ஈயினத்தின் மொய்ப்பார்" (பலாமரத்தினடியில் எழுந்தருளியிருத்தல் பற்றித் திருப்பூவணேசரைத் "தெய்வப்பலரப்பழம்" என்றுர். "தேவி வளர்த்ததிருத் தெய்வப் பலாவடியின் மேவிப் பழுத்த வியன்கனி" என்பர் பின்னும்; ககூடு.ஈ-தேனீ) புட்பவனப் பூந்தேனைப் பார்த்து இருகண்வண்டாற் பருகுவார். இறைவன் சடையிலணியுங் கங்கையின் தவத்தையும் இமவான் மங்கையின் தவத்தையும் வழுத்துவார். தங்கள் தவக்குறையை நோவார். அவன் தடந்தோள்களையும் நோக்கித் தங்கள் முலைகளையும் நோக்கி நிற்பார். மெல்லியாள் அவன்மீது வைத்த நகச்சின்னம் நோக்குவார். உளம்நைவார். ஏகாசம் வீழ எதிர்நிற்பார். (ஏகாசம்-உத்தரீயம்)

—மாகாதல்
வெள்ளத்தை நீந்த விடையோனை
நாவாய் கேட்(டு)
உள்ளத்தி னுள்ளே யுருகுவார்

(நாவாய்-கப்பல்; நாவையுடைய வாய்; சிலேடை)

விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு விவேகானந்த சபை

௸ சபையாரால் சித்திரபானு௵ மார்கழி௴ (26-12-42) அகில இலங்கைச் சைவ சமயபாடப் பரீக்ஷையில்விசேஷபரிசுபெற்ருேர்:

மேற்பிரிவு 1ம் பரிசு: பெர். நவரத்தினம். தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை; 2ம் பரிசு சு. அன்னலட்சுமி; கொக்குவில் ஸ்ரீ நாமகள் வித்தியாசாலை; 3ம் பரிசு ச. கந்தசாமி சுன்ஞகம் மயிலணிச் சைவவித்தியாசாலை;

மத்தியபிரிவு:- ஆங்கில வித்தியாசாலை: 1ம் பரிசு ஆ. நாகராஜசர்மா, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி; 2ம் பரிசு ஆ. வயிரவப்பிள்ளை, தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை; தமிழ் வித்தியசாலை 1ம் பரிசு க. கனகராசா கொக்குவில் ஸ்ரீ நாமகள் வித்தியாசாலை; 2ம் பரிசு அ. மகேஸ்வரி சுன்ஞகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு:- ஆங்கில வித்தியாசாலை; 1ம் பரிசு க. நடராசா, காங்கேசன் துறை நடேஸ்வர வித்தியாலயம்; 2ம் பரிசு S. முத்தையா காரைநகர் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை: 1ம் பரிசு சி. முத்துலட்சுமி, தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை; 2ம் பரிசு க. சிவமணி வீமன்காமம் துவிபாஷா பாடசாலை.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மகோற்சவத்தின் பொருட்டு இந்துக்கல்லூரி சென்ற வெள்ளிக்கிழமை (13-8-43) விடுதலை செய்யப்பட்டது; செப்டெம்பர்மாசம் 6ல் வழமையபடி ஆரம்பமாகும். இக்கல்லூரியின் பிரிவாகிய யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரி வருகிற செப்டெம்பர்மாசம் 10ல இதற்கென ஒழுக்குசெய்யப்பட்ட பிரத்தியேகமான ஒரு கட்டடத்தில் ஆரம்பமாகுமென அறியலானேம்.

## உணவுப் பொருள் விலைக் கட்டுப்பாடு

கொழும்பு ஆகஸ்ட் 14— உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் சகல வர்த்தகர்களையும் கட்டுப்படுத்தும் முறையில் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யுமாறு அரசாங்க சபையை வற்புறுத்திக் கேட்டுக் கொள்வதாகத் தெஹிவளை நகரசபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

மேட்டுத் தெருவிலுள்ள கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நிகழும் சுபானு வருஷம் ஆடி மாசம் ௨௩௳ (8-8-43) ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணி வரையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை கொண்டாடப் பட்டது. அன்றைய நிகழ்ச்சிகட்குத் திரு. இ. இளையதம்பி அவர்கள் தலைமை வகித்தனர். சபையின் பூஜாக் கிருகத்தியுள்ள திருவுருவப் படங்கட்குப் பூசை நிகழ்ந்த பின் முதலியார் சு. பொன்னம்பல மவர்களும், திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையையும் சேவையையும குறித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். சுவாமிகளின் அருமை பெருமைகள் பிரசாரகர்களாலும் தலைவராலும் நன்கு எடுத்து விளக்கப்பட்டன. அதனபின், அங்குக் குழுமி இருந்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டதும் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### திங்கள் ஆகஸ்ட் 16

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஏ கே ராஜுசாயுடுநாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பந்தணைநல்லூர் ஜீவா பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஏ கே ராஜுசாயுடு நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 பந்தணை நல்லூர் ஜீவாயி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மோஸ்கோவிலிருந்த ஆசிரியர்சுயசரிதம் 7-55 திரைஇசை† 8 கீவளூர் மீஞஷி சுந்தரம்பிள்ளைபாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ராகம், தானம் பல்லவி 10-05 டெல்லியில் உள்ளபடி 10-30 முடிவு.

### செவ்வாய் ஆகஸ்ட் 17

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 டி என் இராஜாத்தினம் நாகஸ்வரம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஏ பாஸ்கரதருப் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எல். சுசீலாதேவி வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எல் சுசீலாதேவி வீணை 5-45 இசைப்பயிற்சி 6 ஏ பாஸ்கரதருப் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஷபி இமாத் (பேச்சு) 7-25 துதிப் பாடல்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 விருந்தாளி நாடகம் 8 மதராசில் உள்ளபடி (சாத்தூர் எஸ் கிருஷ்ண ஐயங்கார் பாட்டு 9 15 உம்ராஸியாபேகம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல், வியோலா 10 இசை வேளை† 10-30 முடிவு.

### புதன் ஆகஸ்ட் 18

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ராமநாதபுரம்தேவதுஞ்சரிபாட்டு 9முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராமநாதபுரம் தேவதுஞ்சரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 மாயவரம் கோவிந்தராஜபிள்ளை வயலின் 5.45 இசைப்பயிற்சி 6 பி மலையப்ப சாஸ்திரி பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பச்சைக்கல் விக்கிரகம் சிறுகதை 8 மாயவரம் கோவிந்தராஜபிள்ளை வயலின் 8-30 அமெரிக்க வாக்கு 8-45 பி மலையப்பசாஸ்திரி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கடத்தூர் சங்கரமய்யங்கார் வீணை 10 மதராசில் உள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் ஆகஸ்ட் 19

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 துதிப் பாடல்கள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே பி பாக்கியலக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சேலம் கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2–05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 சேலம் கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 கே பி பாக்யலக்ஷ்மி பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 640 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 கே ஆர் குமாரசாமி பாட்டு 9 வெண் சிறகுகள் இசைச்சித்திரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அரசியல் அமைப்புகள் ஆங்கிலப்பேச்சு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

## தெஹிவலையில் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை

நிகழும் ஆவணிமாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில், தெஹிவலைச் சைவசித்தாந்த மன்ற மண்டபத்தில், சுவாமிகளுடைய குருபூசை வெகு விமரிசையாக நடந்தேறியது. அத்தருணம், தென்புலோலியூர், திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் "சேக்கிழார் காட்டிய சுந்தரர்" என்ற விஷயம்பற்றி – பெரிய புராணத்திலுள்ள கவிநயங்களைக் காட்டி-விரிவாகச் சொற்பொழிவாற்றினுர்கள்.

—கடித.

## கடிதம்

4.ம் பக்கத் தொடர்ச்சி

பணம் உதவி வந்திருக்கிறுர்கள். இந்தத் திட்டமானது ஒரு தர்ம விஷயம்என்பதைப்பற்றியும், நாட்டு மக்களின் சுகசீவியத்திற்கு எவ்வளவு முக்கியமானதென்பதைப் பற்றியும் ஒருவரும் சந்தேகங்கொள்ள மாட்டார்கள். அரசாங்கமும் சனங்களும் குறைவின்றிப் பணம் கொடுத்துதவவேண்டிய சங்கடமான நிலைமைகள் பல இருக்கின்றன என்பதுண்மையே, காருண்யமுள்ள இந்த நல்ல விஷயத்தின் பொருட்டும் பணஉதவி கேட்கும்படி முற்கூறிய காரணங்களே ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஞாபகார்த்தநிதியின் நிர்வாகசபையைத் தூண்டிவிட்டன.

இவ்வேண்டுகோளைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்து உதவிசெய்ததற்காக எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்

ஜோர்ஜ் இ. டி. சில்வா,

சுகாதார மந்திரியும், ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் ஞாபகார்த்த நிதியின் நிர்வாகசபைத் தலைவரும்.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)





## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்ருேட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுகாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசிராய் நடத்தும் அரசினரின் அங்கிகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)



## குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 16, August, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org